பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை –28.

**சுற்றறிக்கை**

**ந.க.எண். 54841 /சி1/2018–2 நாள் :14.12.2018.**

பொருள்: பதிவு அலுவலரின் இலக்க சான்றொப்பம் மற்றும் விரைவு குறியீடு இடப்பட்ட வில்லங்கச்சான்று மற்றும் சான்றிட்ட நகல்கள் வழங்குதல் – 10.12.2018 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது – சான்றுகள் அனுப்புவதற்கு உரிய காலவரையறை நிர்ணயம் செய்யப்பட்டது – வலியுறுத்துதல் – தொடர்பாக.

பார்வை 1. பதிவுத்துறைத்தலைவர் க.எண்.42407/சி1/96 நாள் 29.5.1997.
2 பதிவுத்துறைத்தலைவர் க.எண்.8361/சி1/07 நாள் 25.5.07.
3 பதிவுத்துறைத்தலைவர் க.எண்.42407/சி1/96 நாள் 29.5.97.
4 பதிவுத்துறைத்தலைவர் க.எண். 54841/சி1/18–1 நாள் 14.12.2018.

******

பார்வை 1ல் கண்ட கடிதத்தில், நிலையாணை எண்.979 என்பது 979(i), 979(ii) என திருத்தியமைக்கப்பட்டு 979(i),ல் பொது தேடுதல் மற்றும் வில்லங்கச்சான்று தயாரித்தல் ஆகிய பணிகள் கணினி வழி தயாரித்து வழங்கும்போது 3 நாட்களுக்குள் (விண்ணப்பம் அனுமதிக்கப்பட்ட நாளைத் தவிர்த்து) வழங்க வேண்டுமெனவும் 979(ii)–ல் கைமுறையாக (Manual) தயாரித்து வழங்கும்போது 7 நாட்களுக்குள் (விண்ணப்பம் அனுமதிக்கப்பட்ட நாளைத் தவிர்த்து) வழங்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. பார்வை 2ல் கண்ட கடிதத்தில், நிலையாணை எண்.979(ii) க்கு திருத்தம் பிறப்பிக்கப்பட்டு கைமுறையாக (Manaual) தயாரித்து வழங்கும்போது 4 வேலை நாட்களுக்குள் (விண்ணப்பம் அனுமதிக்கப்பட்ட நாளைத் தவிர்த்து) வழங்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Verified RealEstate™

3. பார்வை 3ல் கண்ட கடிதத்தில், நிலையாணை எண்.1024(a) க்கு திருத்தம் பிறப்பிக்கப்பட்டு சான்றிட்ட நகல் வழங்கும் போது முத்திரைத் தாள் விண்ணப்பதாரரால் வழங்கப்பட்டதிலிருந்து 5 வேலை நாட்களுக்குள் (முத்திரைத் தாள் வழங்கிய நாளைத் தவிர்த்து) வழங்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. பார்வை 4ல் கண்ட கடிதத்தில், நிலையாணை எண்.1024(a) என்பது திருத்தியமைக்கப்பட்டு 1024(a)(ii) என்ற புதிய நிலையாணை பதிவு செய்த ஆவணங்களைப் பொறுத்து சான்றிட்ட நகல் வழங்குவதற்காக கொணரப்பட்டது. இதில் பதிவு செய்த ஆவணங்களைப் பொறுத்து சான்றிட்ட நகல் கோரும் போது 3 வேலை நாட்களுக்குள் (விண்ணப்பம் பெறப்பட்ட நாளைத் தவிர்த்து) வழங்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இணையதளம் வழி விண்ணப்பித்து விரைவுக் குறியீடு மற்றும் பதிவு அலுவலரின் இலக்க சான்றொப்பமிட்ட வில்லங்கச் சான்று மற்றும் சான்றிட்ட நகல் அவர்களின் உள்நுழைவில் பெற்றுக் கொள்ளும் வசதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

6. மேற்கண்ட விரைவுக் குறியீடு மற்றும் பதிவு அலுவலரின் இலக்க சான்றொப்பமிட்ட வில்லங்கச் சான்று மற்றும் சான்றிட்ட நகல் வழங்கும்போது கடைபிடிக்க வேண்டிய காலவரையறை குறித்துக் கீழ்கண்டவாறு அறிவுரை வழங்கப்படுகிறது.

(a) கணினிமயமாக்கப்பட்ட தரவிலிருந்து வில்லங்கச்சான்று தயாரித்து விரைவுக் குறியீடு மற்றும் பதிவு அலுவலரின் இலக்க சான்றொப்பமிட்டு அனுப்பும் நிகழ்வில் நிலையாணை 979(i)ல் குறிப்பிடப்பட்ட காலவரையான 3 நாட்களுக்குள் (விண்ணப்பம் அனுமதிக்கப்பட்ட நாளைத் தவிர்த்து) தயாரித்து மனுதாரரின் உள்நுழைவிற்கு(Login) அனுப்ப வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

(b) கணினிமயமாக்கப்படாத காலத்திற்கான வில்லங்கச்சான்று தயாரித்து வழங்கும் நிகழ்வில் நிலையாணை 979(ii)ல் குறிப்பிடப்பட்ட

Verified RealEstate™

காலவரையான 4 நாட்களுக்குள் (விண்ணப்பம் அனுமதிக்கப்பட்ட நாளைத் தவிர்த்து) தயாரித்து வழங்க வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

(c) கணினிமயமாக்கப்பட்ட தரவிலிருந்து சான்றிட்ட நகல் தயாரித்து விரைவுக் குறியீடு மற்றும் பதிவு அலுவலரின் இலக்க சான்றொப்பமிட்டு அனுப்பும் நிகழ்வில் நிலையாணை 1024(a)(ii)ல் குறிப்பிடப்பட்ட காலவரையான 3 நாட்களுக்குள் (விண்ணப்பம் அனுமதிக்கப்பட்ட நாளைத் தவிர்த்து) தயாரித்து மனுதாரரின் உள்நுழைவிற்கு(Login) அனுப்ப வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

(d) கணினிமயமாக்கப்படாத காலத்திற்கான சான்றிட்ட நகல் தயாரித்து வழங்கும் நிகழ்வில் நிலையாணை 1024(a)(ii)ல் குறிப்பிடப்பட்ட காலவரையான 3 நாட்களுக்குள் (முத்திரைத்தாள் வழங்கப்பட்ட நாளைத் தவிர்த்து) தயாரித்து வழங்க வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

7. மேற்படி நிகழ்வுகளில் ஏற்படும் காலதாமதம் கடுமையாக நோக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும், மாவட்டப்பதிவாளர்கள் மற்றும் துணைப்பதிவுத்துறைத் தலைவர்கள் தங்களின் உள்நுழைவிலுள்ள மேற்படி நிகழ்வுகளுக்கான மேலாண்மை தகவல் தொகுப்பை (MIS) தினந்தோறும் பார்வையிட்டு குறிப்பிட்ட காலவரையறைக்குள் விரைவுக் குறியீடு மற்றும் பதிவு அலுவலரின் இலக்க சான்றொப்பமிட்ட வில்லங்கச் சான்று மற்றும் சான்றிட்ட நகல் பொதுமக்களுக்கு வழங்கப்படுவதை உறுதிசெய்து கொள்ள வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

14/12/2018

பதிவுத்துறைத்தலைவர்

பெறுநர்:

அனைத்து பதிவு அலுவலர்கள்

அனைத்து மாவட்டப் பதிவாளர்கள்

Verified RealEstate

அனைத்து துணைப் பதிவுத்துறைத் தலைவர்கள்

நகல்:

1. முதுநிலை நேர்முக உதவியாளர்,
   மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள்
2. அரசு முதன்மைச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை,
3. பதிவுத்துறை பயிற்சி நிலையம், சென்னை.
4. அனைத்து உயர் அலுவலர்கள், பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்

Verified RealEstate ™